TNTS0E0006232021

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,
நீதித்துறை நடுவர்
2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 24 ம் நாள் புதன்கிழமை

சுருக்கு வழக்கு எண் : 217/2021

(CNR.No:TNTS0E0006232021)

எம்.பொன்னுத்துரை, (வயது 38),
த.பெ.மாரிமுத்து,
கதவு எண்.140, காமராஜ் தெரு,
குற்றாலம், தென்காசி மாவட்டம். ... புகார்தாரர்

/எதிர்/

பாலசுப்பிரமணியன்,
த.பெ.பத்மநாபன்,
Sorna Cotton World Properietor,
க.எண்.P.W.D, காம்பவுண்ட் மற்றும் காலனி,
வீரபாண்டி அம்மன் கோவில் எதிர்,
குற்றாலம் குடியிருப்பு,
தென்காசி மாவட்டம்,
குற்றாலம் காவல் சரகம். ... குற்றம் சாட்டப்பட்டவர்

Case Summary
RULE 106 of CRP

Sl.No	Particulars	
1	Name of the parties:	Complainant : Ponnudurai Accused : Balasubramanian
2	Accused Age	-
3	Father/Husbands Name	Padmanaban
4	Caste or Religion	-
5	Calling	-
6	Residence	D.No.12, P.W.D, Compound Kovil Opposite, Courtallam Kudieruppu
7	Taluk	---

<table>
<tr><td>8</td><td>Date of Occurrence</td><td>---</td></tr>
<tr><td>9</td><td>Date of filing</td><td>03.02.2021</td></tr>
<tr><td>10</td><td>Apprehension</td><td>-</td></tr>
<tr><td>11</td><td>Released on bail</td><td>-</td></tr>
<tr><td>12</td><td>Commitment</td><td>-</td></tr>
<tr><td>13</td><td>Commencement of Trial</td><td>11.05.2023</td></tr>
<tr><td>14</td><td>Closure of Trial:</td><td>10.09.2025</td></tr>
<tr><td>15</td><td>Sentence of order:</td><td>Convicted U/s.278(2) of BNSS.</td></tr>
<tr><td>16</td><td>Service of copy of Judgment</td><td>Yes</td></tr>
<tr><td>17</td><td>Case summary
period of Remand of accused</td><td>---</td></tr>
<tr><td>18</td><td>Date of filing the Final Report</td><td>---</td></tr>
<tr><td>19</td><td>Date of questioning U/s.251 of Cr.P.C</td><td>28.04.2023</td></tr>
<tr><td>20</td><td>Date of Examination of accused U/s.313(1)(b) of Cr.P.C</td><td>05.01.2024</td></tr>
<tr><td>21</td><td>Miscellaneous petition and their result</td><td>Nil</td></tr>
<tr><td>22</td><td>Date of Examination Chief and cross</td><td><table><tr><td colspan="2">Complainant</td><td colspan="2">Accused</td></tr><tr><td>PW’s</td><td>Cross</td><td>DW’s</td><td>Cross</td></tr><tr><td>09.6.23</td><td>---</td><td>---</td><td>---</td></tr></table></td></tr>
<tr><td>23</td><td>Details of abscondence of accused his appearance / production</td><td>Nil</td></tr>
<tr><td>24</td><td>Grant stay by superior Court and the results thereof</td><td>Nil</td></tr>
</table>

இந்த குற்ற முறையீடு இந்த நீதிமன்றத்தில் 10.02.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.குட்டித்துரை அவர்களும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர்

திரு.எஸ்.பழனிக்குமார் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

இந்த வழக்கானது தனிநபர் புகார் அடிப்படையில் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 ன் படியான குற்றத்திற்காக தொடரப்பட்ட வழக்காகும்.

2. **மனுவின் சுருக்கம்** –

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் Sorna Cotton World என்ற நிறுவனத்தின் உரிமையாளர் எனவும், குற்றம்சாட்டப்பட்டவரின் மனைவி குற்றாலம் ஆரம் சுகாதார நிலையத்தில் பணிபுரிந்துவதாலும், அதன் அருகே புகார்தாரர் வழக்கறிஞர் அலுவலகம் நடத்தி வருவதால் குற்றம்சாட்டப்பட்டவர் அவரது மனைவியை சுகாதார நிலையத்தில் அழைத்து வந்து விடும்போது புகார்தாரருக்கும், குற்றம்சாட்டப்பட்டவருக்கும் பழக்கம் ஏற்பட்டு குடும்ப நண்பராக பழகி வந்ததாகவும்,

இந்நிலையில் புகார்தாரர் தன் பெயரில் உள்ள இடங்களை விற்று வங்கி கணக்கில் பணத்தை வைப்பீடு செய்திருப்பதை தெரிந்த குற்றஞ்சாட்டப்பட்டவர் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் புகார்தாரரின் வீட்டில் வைத்து சந்தித்து தன் தொழில் அபிவிருத்திக்காக ரூ.7,00,000/– (ஏழு இலட்சம்) கடனாக கேட்டு அந்த தொகையை மூன்று மாத காலத்திற்குள் திருப்பி செலுத்துவதாக உறுதியளித்ததாகவும் அதனை நம்பி புகார்தாரர் கடந்த 10.09.2020 தேதியில் தனது வங்கி கணக்கில் இருந்த ரூபாய் 6,00,000/–த்தை எடுத்தும், கையில் இருந்து ரூபாய் 1,00,000/–த்தையும் சேர்த்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு கடந்த 12.09.2020 தேதியில் புகார்தாரர் வீட்டில் வைத்து ரூ.7,00,000/–த்தை கடனாக கொடுத்ததாகவும், அந்த கடனை புகார்தாரருக்கு திருப்பி செலுத்தும் பொருட்டு, கடன் தொகை ரூ.7,00,000/– (ஏழு இலட்சத்திற்கு) குற்றஞ்சாட்டப்பட்டவர் கணக்கு வைத்துள்ள தென்காசி IDBI வங்கியின் காசோலை

எண்.052923 யை 03.12.2020 என்ற பின்தேதியிட்டு புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை 03.12.2020 ம் தேதியன்று புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் குற்றாலம் கிளை கனரா வங்கியில் வசூலுக்கு செலுத்திய போது காசோலையானது "Funds Insufficient" என்று காரணம் கூறி 05.12.2020 ம் தேதி வங்கியில் மெமோ மூலம் தெரிவித்ததாகவும், அதனால் 28.12.2020 ம் தேதியில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதில் அந்த அறிவிப்பானது "Left without intimation Return to sender" என்ற காரணம் கூறி 29.12.2020 தேதியில் திருப்பப்பட்டுவிட்டதாகவும், இதுகுறித்து உடனடியாக குற்றஞ்சாட்டப்பட்டவரை தொடர்பு கொண்டு தெரிவித்ததற்கு 15 நாட்களுக்குள் காசோலைக்குரிய தொகையை செலுத்துவதாக உறுதியளித்ததாகவும், ஆனால் எவ்வித பணமும் செலுத்தவில்லை, பதிலும் அனுப்பவில்லை. எனவே குற்றஞ்சாட்டப்பட்டவரின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் ஆகும். அதனால் காசோலையில் கண்ட காசோலை தொகையான ரூ.7,00,000/- (ஏழு இலட்சம்) குற்றம்சாட்டப்பட்டவர், புகார்தாரருக்கு இழப்பீடாக வழங்கியும், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் படியான குற்றத்திற்கு தக்க தண்டனை வழங்குமாறு புகார்மனு தாக்கல் செய்துள்ளார்.

3. புகார்தாரர் இந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகி சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். அதனை பரிசீலனை செய்ததில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக இந்த வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற வழக்கு ஆதாரம் இருந்ததால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு புகார் நகலுடன் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. குற்றம் சாட்டப்பட்டவர் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது குவிமுச பிரிவு 251-ன் படி குற்றத்தின் சாராம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு புகார்தாரர் சொன்ன தேதியில் பணம்

கொடுக்கவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர், புகார்தாரருக்கு காசோலையும் கொடுக்கவில்லை. மேலும் அவர் குற்றாலத்தில் கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், அவரது மனைவி அரசாங்கத்தில் பணிபுரிந்து வருவதால் குடும்ப செலவிற்காக புகார்தாரரிடம் பணம் வாங்க வேண்டிய அவசியமில்லை என்று கூறினார். அதனால் புகார்தாரர் தரப்பில் சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் அவரது வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் ம.சா.1 விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான பின்வரும் ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். 03.12.2020 ம் தேதியிட்டு ரூ.7,00,000/-க்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் புகார்தாரருக்கு வழங்கிய IDBI Bank, தென்காசி கிளைக்குரிய காசோலை எண்.052923 ம.சா.ஆ.1. 03.12.2020 ம் தேதியிட்ட காசோலையை வங்கியில் செலுத்தப்பட்ட கவுண்டர் பாயில் ம.சா.ஆ.2. 05.12.2020 ம் தேதியில் காசோலை திருப்பப்பட்டதற்கு வழங்கப்பட்ட மெமோ ம.சா.ஆ.3. 28.12.2020 ம் தேதியில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.4. 28.12.2020 ம் தேதியில் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது ம.சா.ஆ.5. 29.12.2020 ம் தேதியிட்ட Return notice cover ம.சா.ஆ.6. 11.09.2020 அன்று மனுதாரர் குற்றாலம் கிளை, கனரா வங்கியில் பணம் எடுத்ததற்கான வங்கி கணக்கு கோப்புகள் ம.சா.ஆ.7. வட்டாட்சியர் புகார்தாரரின் தாயார் மனோரஞ்சிதத்திற்கு வழங்கிய Money Lender License No.16/2017 ம.சா.ஆ.8 தாக்கல் செய்துள்ளார். பின்பு புகார்தாரரை குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. புகார்தாரரின் சாட்சியத்திலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக உள்ள பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அந்த சமயம் கொரோனா காலகட்டம் என்பதால் நான் எங்கும் செல்லவில்லை, அவரும் பணம் தரவும் இல்லை. கொரோனா ஊரடங்கு இரண்டு ஆண்டுகள் முழுவதும் இருந்ததால், குற்றாலத்தில்

தொழில்கள் முடங்கி இருந்தது. நான் 2018 ம் ஆண்டு மொத்தமாக துணியை விற்பனை செய்யும் தொழிலுக்காக பெற்ற 3 லட்சத்திற்காக அந்த காசோலையை புகார்தாரர் என்னிடம் வாங்கியிருந்தார். நான் கொடுத்த காசோலை சொர்ணா காட்டன் கம்பெனிக்குரியது என்று கூறியுள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு என்றும் பதிலளித்தார். எனவே குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் போதிய வாய்ப்பு கொடுத்தும் எந்தவித வாய்மொழி சாட்சியம் முன்னிறுத்தவில்லை. புகார்தாரரை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யும்போது எ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

(i) கடந்த 12.09.2020 ம் தேதியில் புகார்தாரரிடம் குற்றம்சாட்டப்பட்டவர் குடும்ப நண்பர்கள் என்ற அடிப்படையில், ரூ.7,00,000/– (ஏழு இலட்சத்தை) கடனாக பெற்றுக்கொண்டு, ஷை கடன்தொகைக்கு ஆதரவாக புகார்தாரரிடம் இந்த வழக்கு காசோலையை 03.12.2020 என பின்தேதியிட்டு கொடுத்தாரா? அந்த காசோலை (Funds insufficient) என திரும்பியதால், குற்றம்சாட்டப்பட்டவர் மாற்று முறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் படியான குற்றம் புரிந்துள்ளாரா?

(ii) புகார்மனுவில் கோரியுள்ளபடி புகார்தாரருக்கு காசோலை தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>தீர்வுகள்</u>

<u>பிரச்சனை –I</u>

<u>வாதங்கள்</u>

8 (i) புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் புகார்மனுவில் சொல்லப்பட்ட சங்கதிகளை வலியுறுத்தி முதல் விசாரணை சாட்சியம் அளித்து ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை தாக்கல்

செய்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர் இந்த வழக்கு காசோலை தன்னுடையது இல்லை என மறுக்கவில்லை. அதனால் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 118(ஏ), 139–ன் படியான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக ஏற்பட்டுள்ளது.

மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொழில் நிமித்தமாக கடந்த 2018ம் ஆண்டு 3 லட்சம் புகார்தாரரிடம் கடனாக வாங்கியதற்கு இந்த வழக்கு காசோலையை கொடுத்ததாக நீதிமன்றத்தில் கூறியுள்ளார். ஆனால் அது உண்மை என சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. அதேபோல் புகார்தாரர் சிட்டை பணம் வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடையிலிருந்து வழக்கு காசோலையை எடுத்து வந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என செய்த எதிர்வாதத்தையும் நீதிமன்றத்தில் சாட்சிகள் மூலம் நிரூபிக்கவில்லை. அதனால் இந்த வழக்கில் புகார்தாரருக்கு ஆதரவாக ஏற்பட்ட பிரிவு 118, 139 ன் படியான சட்டப்படியான அனுமானத்தை Preponderance of probability அடிப்படையில் மறுத்து நிரூபிக்கவில்லை. எனவே குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றம் ம.சா.1 சாட்சியத்தின் மூலமும், ஆவணங்கள் மூலமும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் குற்றம்சாட்டப்பட்டவருக்கு மாற்று முறை ஆவண சட்டத்தின்படி அதிகபட்ச தண்டனையும் காசோலையில் உள்ள தொகையை நஷ்ட ஈடாக வழங்குமாறு வாதிட்டார்.

(ii) அதேவேளையில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில், காசோலை கொடுத்ததாக சொல்லக்கூடிய தேதியான 12.09.2020ம் தேதி கொரனா காலகட்டம் என்பதால், புகார்தாரரிடமிருந்து கடனாக ரூபாய் எதுவும் குற்றம்சாட்டப்பட்டவர் பெறவில்லை. காசோலையும் கொடுக்கவில்லை. இந்த காசோலையானது 2018ம் ஆண்டு மொத்தமாக துணியை விற்பனை செய்யும் தொழிலுக்காக ரூபாய் 3 லட்சத்தை புகார்தாரரிடமிருந்து குற்றம்சாட்டப்பட்டவர் கடனாக பெற்றுள்ளார். அதற்குதான்

சொர்ணா காட்டன் கம்பெனி பெயரில் உள்ள வழக்கு காசோலையை கொடுத்துள்ளார். அதனால் அந்த காசோலையை வைத்து கூடுதலாக கடன் தொகை ரூபாய் 7 லட்சம் என பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதனால் புகார்மனுவை தள்ளுபடி செய்யும்படி ஆட்சேபித்தார்.

(iii) இந்த வழக்கின் பிரச்சனையை தீர்வு காண்பதற்கு முன்பு பிரிவு 138 NI Act ன் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் கீழ்கண்ட உட்கூறுகள் நிரூபிக்க வேண்டுமென மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Harihara Krishnan Vs. J Thomas 2018 (13) SCC 663** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

Obviously such complaints must contain the factual allegations constituting each of the ingredients of the offence under Section 138. Those ingredients are:

(1) that a person drew a cheque on an account maintained by him with the banker;

(2) that such a cheque when presented to the bank is returned by the bank unpaid;

(3) that such a cheque was presented to the bank within a period of six months from the date it was drawn or within the period of its validity whichever is earlier;

(4) that the payee demanded in writing from the drawer of the cheque the payment of the amount of money due under the cheque to payee; and

(5) such a notice of payment is made within a period of 30 days from the date of the receipt of the information by the payee from the bank regarding the return of the cheque as unpaid. It is obvious from the scheme of Section 138 that each one of the ingredients flows from a document which evidences the existence of such an ingredient.

எனவே புகார்தாரர் இந்த வழக்கில், மேலே கண்ட வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறிய ஐந்து உட்கூறுகளை நிரூபித்தால் மட்டுமே மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138ன் கீழான முதல் நிலை நிரூபணம் initial burdon நிரூபிக்கப்பட்டுள்ளது என கருத முடியும்.

இதுகுறித்து இந்த வழக்கில் இந்நீதிமன்றம் பார்க்கையில், 12.092020 தேதியில் 03.12.2020 என பின்தேதியிட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர், புகார்தாரரிடம் கொடுத்த காசோலை ம.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளார். அந்த காசோலையை செல்லுபடியாகும் காலம் 03.12.2020 ஆம் தேதி ஆகும். அதேதேதியில் அந்த காசோலையை பணமாக்குவதற்காக புகார்தாரர் அவரது வங்கியில் முன்னிட்டுள்ளார். அந்த காசோலை 05.12.2020 தேதியன்று "**Funds Insufficient"** என்று திருப்பப்பட்டுள்ளது. அவ்வாறு திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை (ம.சா.ஆ.3) தாக்கல் செய்துள்ளார். மேற்படி விபரத்திலிருந்து காசோலை (ம.சா.ஆ.1) உரிய காலத்திற்குள் பணமாக்க வங்கியில் முன்னிடப்பட்டுள்ளது என்பதும், அதன் பின்பு அந்த காசோலை "**Funds Insufficient"** என்ற காரணத்தால் திருப்பப்பட்டுள்ளது என்பதும் தெரிகிறது.

பின்னர் அந்த காசோலை திருப்பப்பட்ட விவரம் குறித்து புகார்தாரர் 28.12.2020 தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார். அந்த அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவர் பெறாமல் Left without intimation என்று 29.12.2020 ம் தேதி திருப்பப்பட்டுள்ளது. அதற்குரிய Return notice cover (ம.சா.ஆ.6) குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு இந்த புகாரானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு புகார் மனுவானது இந்த நீதிமன்றத்தின் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரத்திலிருந்து இந்த வழக்கானது உரிய காலவரையறைக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேலே கண்ட முன்தீர்ப்பில் கூறிய 5 உட்கூறுகளை இந்த வழக்கில் புகார்தாரர் நிரூபித்துள்ளார்.

(iv) அதேபோல் குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்த வழக்கு காசோலை தன்னுடையது இல்லை. அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என மறுக்கவில்லை. அதனால் புகார்தாரருக்கு ஆதரவாக சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காகத்தான் காசோலையை பெற்றுள்ளார் என்று மாற்றுமுறை ஆவண சட்டத்தின்படி அனுமானம் ஏற்படுகிறது. மேலும் இதுகுறித்து மாண்புமிகு

உச்சநீதிமன்றம் **Rangappa Vs Mohan 2010(11) SCC 411** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது.

"Once the cheque relates to the account of the accused and he accepts the same and also admits his signature on the cheque, then the initial presumption u/s.139 of NI Act as well as u/s.118 of NI act has to be raised in favour of the complainant. It is a mandatory presumption. But the accused is entitle to rebut the same on preponderance of probabilities."

எனவே மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்கண்ட முன்தீர்ப்பில் சொல்லப்பட்ட சட்டக்கோட்பாட்டின் படி இந்த வழக்கு காசோலையும், அதிலுள்ள கையெழுத்தும், குற்றம் சாட்டப்பட்டவருடையது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். அதனால் இந்த வழக்கு காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காகத்தான் புகார்தாரரிடம் வந்துள்ளது என புகார்தாரருக்கு ஆதரவாக மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 118(a) மற்றும் 139 ன் படியான சட்டப்படியான அனுமானங்கள் ஏற்பட்டுள்ளது.

(v) அதேவேளையில் காசோலை வழக்கில் புகார்தாரருக்கு ஆதரவாக ஏற்பட்ட சட்டப்படியான அனுமானத்தை குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் மறுக்கக்கூடிய அனுமானம் ஆகும். எனவே இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில், புகார்தாரருக்கு ஆதரவாக ஏற்பட்ட சட்டப்படியான அனுமானத்தை சாட்சியங்களை முன்னிறுத்தல் மூலமாகவோ, இல்லை புகார்தாரரின் சாட்சியத்தினை குறுக்குவிசாரணை செய்வதன் மூலமாகவோ Preponderance of probability அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் எதிர்வாதமாக எடுத்து சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலமும் மறுத்து நிரூபிக்கலாம்.

(vi) இதுசம்மந்தமாக இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செய்த முதல் எதிர்வாதமானது,

குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரிடம் சீட்டு கடனாக ரூபாய் 5,30,000/-ம் கடன் வாங்கியிருந்ததாகவும், அந்த கடன் தொகையை தினந்தோறும் சிட்டை வகையில்

ரூ.1,72,000/−ம் வரை செலுத்திவிட்டதாகவும், மீதம் ரூ.3,58,000/−ம் மட்டும்தான் செலுத்த வேண்டிய பாக்கி பணம் உள்ளதாகவும், அந்த தொகையை செலுத்த குற்றம்சாட்டப்பட்டவர் தயாராக உள்ளதாகவும், மேற்படி விவரத்தினை புகார்தாரரிடம் குற்றம்சாட்டப்பட்டவர் வாங்கிய கடனை தினந்தோறும் வசூல் செய்வதற்காக புகார்தாரர் கொடுத்த சிட்டை நோட்டு எ.ம.சா.ஆ.1 மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே சிட்டையில் உள்ள கடனை வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு புகார்தாரர் வந்து, அங்கு இருந்த குற்றம்சாட்டப்பட்டவருக்குரிய இந்த வழக்கு காசோலையை எடுத்து வந்து ரூபாய் 7 லட்சம் என பூர்த்தி செய்து பொய்யாக இந்த வழக்கினை குற்றம்சாட்டப்பட்டவர் மீது புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். அதனால் வழக்கு காசோலையானது legal enforceable debt−யை தீர்ப்பதற்காக கொடுக்கவில்லை. அதனால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138ன் படி பரிகாரம் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என ஆட்சேபித்தார்.

மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் செய்த ஆட்சேபணை குறித்து பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவரிடம் 28.04.2023ம் தேதியில் பிரிவு 251 சி.ஆர்.பி.சி−ன்படி புகார்தாரரின் வழக்கு சாராம்சம் குறித்து கேள்வி கேட்டபோது, அதற்கு புகார்தாரர் சொன்ன தேதியில் பணம் தனக்கு கொடுக்கவில்லை. அதற்காக இந்த வழக்கு காசோலையை புகார்தாரர் கொடுக்கவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர் குற்றாலத்தில் கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், மேலும் அவரது மனைவி அரசாங்கத்தில் பணிபுரிவதாகவும் அதனால் குடும்ப செலவிற்காக அவர் புகார்தாரரிடம் பணம் வாங்க வேண்டிய அவசியமில்லை என கூறியுள்ளார்.

அதேவேளையில் இந்த வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. பின்பு புகார்தாரர் சாட்சியத்தில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து இந்நீதிமன்றம் 05.01.2024ம் தேதி குவிமுச 313(1)(ஆ) இன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடம் கேள்விகேட்கப்பட்டபோது கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த சமயத்தில் காசோலை தொகை கொடுத்ததாக புகார்தாரர் சொன்ன தேதி 12.09.2020 ஆகும். அந்த சமயம் கொரான காலகட்டம் என்பதால் அவர் எங்கும் செல்லவில்லை எனவும், புகார்தாரர் பணம் கொடுக்கவும் இல்லை, கொரனா ஊரங்கு இரண்டு ஆண்டுகள் முழுவதும் இருந்ததால், குற்றாலத்தில் தொழில்கள் முடங்கி இருந்ததாகவும், குற்றம்சாட்டப்பட்டவர் 2018 ம் ஆண்டு மொத்தமாக துணியை விற்பனை செய்யும் தொழிலுக்காக கடன் பெற்ற 3 லட்சத்திற்காக அந்த காசோலையை சொர்ணா காட்டன்வேல்டு கம்பெனி பெயரில் புகார்தாரரிடம் கொடுத்தார் என்பதாகும்.

எனவே குற்றம்சாட்டப்பட்டவரிடம் 28.04.2023 ம் தேதி பிரிவு 251 Cr.P.C. இன் படி கேள்விகேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரிடமிருந்து பணம் எதுவும் கடனாக வாங்கவில்லை காசோலை கொடுக்கவில்லை என கூறியுள்ளார். அதேவேளையில் 05.01.2024 ம் தேதி குவிமுச பிரிவு 313 (1)(ஆ) கேள்விகேட்டபோது, மேற்படி மேலே கண்டவிதம் பிரிவு 251 Cr.P.C. படி முதல் கேள்வி கேட்டபோது கூறிய சங்கதிகளுக்கு முரண்பட்டு, 2018 ம் ஆண்டு துணி வாங்கி விற்பனை செய்யும் தொழிலுக்காக புகார்தாரரிடம் கடனாக குற்றம்சாட்டப்பட்டவர் ரூபாய் 3 லட்சம் வாங்கியதாகவும், அதற்கு ஆதரவாகத்தான் இந்த வழக்கு காசோலையை கொடுத்ததாக கூறியுள்ளார்.

அதேவேளையில் மேலே கண்ட விதம் குற்றம்சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் ஆட்சேபித்த சங்கதிகளான, குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரிடம் சிட்டை வட்டிக்கு பணம் கடனாக வாங்கியதாகவும், அந்த கடன் பணத்தை வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு வந்த புகார்தாரர் இந்த வழக்கு காசோலையை எடுத்து வந்து, அந்த காசோலையில் ரூபாய் 7 லட்சம் என நிப்பி இந்த வழக்கினை தாக்கல் செய்தது உண்மையாக இருக்கும்பட்சத்தில்,

இந்நீதிமன்றம் புகார்தாரர் சாட்சியத்தின் மூலம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ளவை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ) படி கேள்விகேட்டபோது, புகார்தாரரிடம் குற்றம்சாட்டப்பட்டவர் சிட்டை வட்டிக்கு பணம் கடனாக வாங்கியதாகவும், அந்த கடன் பணத்தை வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு வந்து இந்த வழக்கு காசோலையை புகார்தாரர் எடுத்து வந்து ரூ.7,00,000/–த்தை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்ததாக கூறியிருப்பார்.

ஆனால் அதற்கு மாறாக குற்றம்சாட்டப்பட்டவரிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ) படி கேள்விகேட்டபோது, 2018ம் ஆண்டு புகார்தாரரிடமிருந்து ரூபாய் 3 லட்சம் கடன் பெற்றதற்காக வழக்கு காசோலையை குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரிடம் கொடுத்ததாக கூறியுள்ளார். எனவே புகார்தாரரிடம் குற்றம்சாட்டப்பட்டவர் சிட்டை வட்டிக்கு பணம் கடனாக வாங்கியதாகவும், அந்த கடன் பணத்தை வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு புகார்தாரர் வந்து, அங்கிருந்த இந்த வழக்கு காசோலையை புகார்தாரர் எடுத்து வந்துவிட்டார் என கூறியது உண்மையில் நடைபெறவில்லை என Bharatya Shashya Adhiniyam Act பிரிவு 119 ன் படி Common course of natural events அடிப்படையில் இந்நீதிமன்றம் அனுமானத்திற்கு வருகிறது.

(vii) அடுத்ததாக புகார்தாரரிடம் குற்றம்சாட்டப்பட்டவர் சிட்டை வட்டிக்கு பணம் கடனாக வாங்கியதாகவும், அந்த கடன் பணத்தை வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு வந்த புகார்தாரர், இந்த வழக்கு காசோலையை எடுத்து வந்து இந்த புகார்மனுவை தாக்கல் செய்தது சம்மந்தமாக குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில், புகார்தாரரை 25.08.2023ம் தேதி குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது.

> **"...நீங்கள் சிட்டை வட்டி நடத்தி வந்ததில் எதிரி பணம் வாங்கியிருந்தார் என்றும், அதில் எதிரி உங்களுக்கு ரூபாய் 3, 00,000/–ம் தான் தரவேண்டும் என்றும், மேற்படி எதிரியின் கடையில்**

நீங்கள் தினசரி சிட்டைவட்டி கலெக்சனுக்கு வரும் நபர் என்பதால், மேற்படி கடையில் எதிரி வைத்திருந்த காசோலையை நீங்கள் எடுத்து வந்து அதிலுள்ள பாலசுப்பிரமணியன் என்ற பெயர் கூட உங்களுக்கு தெரியாமல் பாலையா என வங்கியில் செலுத்தி தவறுதலான பெயரில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்களிடம் எதிரி வாங்கியிருந்த ரூபாய் 3 லட்சம் பணத்தையும், தினசரி திரும்ப செலுத்தும் முறையில் எதிரி உங்களிடம் சிட்டை வட்டிக்கு வாங்கிய பணத்தையும் செலுத்திவிட்டார் என்றால் என்னிடம் மொத்தமாக தான் வாங்கினார்..."

எனவே மேலே கண்ட ம.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியத்திலிருந்து, புகார்தாரர் சிட்டை வட்டி நடத்தி வந்ததில் குற்றஞ்சாட்டப்பட்டவர் கடனாக பணம் வாங்கியுள்ளதாகவும், அந்த வகையில் <u>ரூபாய் 3 லட்சம் தான் கடன் தொகை செலுத்த வேண்டியுள்ளது</u> எனவும், புகார்தாரர் சிட்டையில் ரூபாய் வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு வந்தபோது, வழக்கு காசோலையை கடையிலிருந்து எடுத்து வந்துவிட்டார் என எதிர்வாதம் செய்து குறுக்குவிசாரணை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

அதேவேளையில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் ம.சா.1 யை 10.05.2024 ம் தேதி குறுக்குவிசாரணை செய்தபோது கீழ்க்கண்டவாறு குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது.

"...எதிரி உங்களிடம் இருந்து ரூபாய் 5,30,000/-ம் சீட்டு கடனாக வாங்கியிருந்தார் என்றும், அதில் தினசரியாக ரூபாய் 2000/-ம், ரூ.4,000/-, ரூ.6000/-ம் என வரவு வைத்து மொத்தமாக ரூபாய் 1,72,000/-ம் பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு

எதிரி ரூபாய் 1,72,000/-ம் பணம் செலுத்தியது போக மீதம் ரூபாய் 3,58,000/-ம் மட்டும்தான் பாக்கி உள்ளது..."

எனவே குற்றம்சாட்டப்பட்டவர் ரூபாய் 5,30,000/-த்தை புகார்தாரரிடம் சீட்டு கடனாக வாங்கியிருந்ததாகவும், அதற்கு தினந்தோறும் பணம் ரூ.1,72,000/-ம் செலுத்திவிட்டதாகவும், மீதம் ரூ.3,58,000/-ம் தான் பாக்கி குற்றம்சாட்டப்பட்டவர் செலுத்தவேண்டியுள்ளதாக எதிர்வாதம் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது.

எனவே இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் 25.08.2023ம் தேதியிட்ட ம.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியத்தில், புகார்தாரரிடமிருந்து ரூபாய் 3 லட்சத்தை சீட்டு கடனாக குற்றம்சாட்டப்பட்டவர் பெற்றதாகவும், அந்த தொகை தான் செலுத்த வேண்டியுள்ளது எனவும், அதேவேளையில் 10.05.2024ம் தேதியில் ம.சா.1யை குறுக்குவிசாரணை செய்ததில், புகார்தாரரிடமிருந்து ரூ.5,30,000/-ம் சீட்டு கடனாக குற்றம்சாட்டப்பட்டவர் பெற்றதாகவும், அதில் ரூ.1,72,000/- செலுத்திவிட்டதாகவும், மீதம் ரூ.3,58,000/- தான் செலுத்த வேண்டிய பாக்கி உள்ளதாகவும், இருவேறுபட்ட தொகைகளை கடனாக பெற்றதாக கூறியுள்ளார். மேலும் அந்த சீட்டு பணத்தை வசூல் செய்வதற்கு வரும்போது குற்றம்சாட்டப்பட்டவர் கடையிலிருந்து இந்த வழக்கு காசோலையை புகார்தாரர் எடுத்து வந்துவிட்டார் என கட்சி செய்துள்ளார். அதனால் இதில் இந்த இரண்டு வேறுபட்ட தொகைகளில் எது உண்மையானது என்பதை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். ஆனால் அதுசம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் எந்தவித வாய்மொழி சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை.

அதேபோல் புகார்தாரர் எந்த தேதியில், எந்த நேரத்தில் குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு சீட்டு பணம் வசூல் செய்ய வந்தார் எனவும், அப்போது வழக்கு காசோலையை எடுத்து வந்தார் எனவும், அந்த நேரத்தில் கடையில் யார் யார் இருந்தார்கள் என்று

சாட்சிகள் மூலம் குற்றம்சாட்டப்பட்வர்கள் தரப்பில், புகார்தாரர் இந்த வழக்கு காசோலையை குற்றஞ்சாட்டப்பட்டவர் கடையிலிருந்து எடுத்து வந்தார் என்பது உண்மை என நீதிமன்றம் நம்பும் வகையில் Prepondarance of propability அடிப்படையில் நிரூபிக்கவில்லை.

அதேவேளையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் கட்சிப்படியே, புகார்தாரர் இந்த வழக்கு காசோலையை சிட்டை வட்டி பணம் வசூல் செய்வதற்கு புகார்தாரரின் கடைக்கு வந்தபோது, எடுத்து சென்றிருந்தால் அதுசம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார். ஆனால் அவ்வாறு புகார் எதுவும் காவல்நிலையத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் கடையில் இருந்த காசோலையை புகார்தாரர் எடுத்து சென்றுவிட்டார் என கொடுக்கவில்லை. இதிலிருந்தே உண்மையிலேயே புகார்தாரர் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கடையிலிருந்து இந்த வழக்கு காசோலையை எடுத்துச் சென்று இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்பது நம்பத்தகுந்தவையாக இல்லை.

எனவே இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர், புகார்தாரரிடமிருந்து ரூபாய் 3 லட்சம் கடனாக பெற்றதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை கொடுத்தார் என்ற சங்கதி உண்மையானதா? இல்லை குற்றஞ்சாட்டப்பட்டவர் புகார்தாரரிடமிருந்து ரூபாய் 5,30,000/-ம் சீட்டு கடன் பெற்றதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை குற்றம்சாட்டப்பட்டவர் கடையிலிருந்து புகார்தாரர் எடுத்து வந்து இந்த புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்ற சங்கதி உண்மையானதா? என்பதினை நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் தெளிவுபடுத்தவில்லை.

எனவே இந்த வழக்கில் மேற்கண்டபடி குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் செய்த எதிர்வாத சங்கதிகளை பரிசீலனை செய்ததிலிருந்து,

i) இந்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரிடம் குவிமுச பிரிவு 251ன் படி கேள்வி கேட்கும்போது, புகார்தாரரிடம் பணம் வாங்கவும் இல்லை, காசோலையை கொடுக்கவும் இல்லை என கூறியுள்ளார்.

ii) மேலும் இந்நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவரிடம் குவிமுச பிரிவு 313(1) (ஆ) ன் படி கேள்வி கேட்கும்போது, 2018 ம் ஆண்டு துணி வாங்கி தொழில் செய்யும் வகைக்காக ரூபாய் 3 லட்சத்தை கடனாக புகார்தாரரிடமிருந்து குற்றம்சாட்டப்பட்டவர் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்ததாக கூறியுள்ளார்.

iii) அதேவேளையில் ம.சா.1 யை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் நீதிமன்றத்தில் 25.08.2023 ம் தேதியில் குறுக்குவிசாரணை செய்யும்போது, புகார்தாரர் சிட்டை வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்து வருவதாகவும், புகார்தாரர் குற்றம்சாட்டப்பட்டவரிடமிருந்து ரூபாய் 3 லட்சம் கடனாக பெற்றதாகவும், அந்த பணத்தை வசூல் செய்வதற்கு வரும்போது, குற்றம்சாட்டப்பட்டவரின் காசோலையை எடுத்து வந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கட்சி செய்துள்ளார்.

iv) மேலும் ம.சா.1 யை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் நீதிமன்றத்தில் 10.05.2024 ம் தேதியில் குறுக்குவிசாரணை செய்யும்போது, புகார்தாரர் சிட்டை வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்து வருவதாகவும், புகார்தாரர் குற்றம்சாட்டப்பட்டவரிடமிருந்து ரூபாய் 5,30,000/−ம் கடனாக பெற்றதாகவும், அந்த பணத்தில் ரூ.1,72,000/−ம் வரை செலுத்திவிட்டதாகவும், மீதம் ரூ.3, 58,000/−ம் மட்டும்தான் பாக்கி உள்ளதாகவும், அந்த பணத்தை வசூல் செய்வதற்கு வரும்போது, குற்றம்சாட்டப்பட்டவரின் காசோலையை எடுத்து வந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக முரண்பட்டு கட்சி செய்துள்ளார்.

அதனால் இந்த புகார்மனுவில் புகார்தாரருக்கு ஆதரவாக மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118(A), 139 இன் படி ஏற்பட்ட சட்டப்படியான அனுமானங்கள் மறுத்து, குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேலே செய்த எதிர்வாதமான, புகார்தாரரிடம் சீட்டு கடனாக குற்றம்சாட்டப்பட்டவர் ரூபாய் 5,30,000/−ம் கடன் வாங்கியதாகவும், அந்த கடன் தொகையை தினந்தோறும் செலுத்திய வகையில் ரூ.1,72,000/−ம் வரை செலுத்திவிட்டதாகவும், மீதம் ரூ.3, 58,000/−ம் மட்டும்தான் பாக்கி உள்ளதாகவும், அதை செலுத்த தயாராக இருப்பதாகவும், சிட்டையில் சீட்டு பணத்தை வசூல் செய்வதற்காக குற்றம்சாட்டப்பட்டவர் கடைக்கு புகார்தாரர் வந்து, அங்கு இருந்த குற்றம்சாட்டப்பட்டவருக்குரிய இந்த வழக்கு காசோலையை எடுத்து வந்து ரூபாய் 7 லட்சம் என பொய்யாக பூர்த்தி செய்து இந்த வழக்கினை பிரிவு 138 NI Act இன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர் மீது புகார்தாரர் தாக்கல் செய்துள்ளதாக கூறியதை, குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் Prepondarance of Probability அடிப்படையில் நிரூபிக்கவில்லை என இந்நீதிமனறம் முடிவுக்கு வருகிறது.

(viii) அடுத்ததாக குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில், குற்றம்சாட்டப்பட்டவருக்கு வழக்கு காசோலை தொகை ரூபாய் 7 லட்சத்தை புகார்தாரர் கடனாக 12.09.2020 ம் தேதியில் கொடுத்ததாக கூறியுள்ளார். அந்த காலகட்டத்தில் நாடு முழுவதும் கொரோனா லாக் டவுன் நடைமுறையில் இருந்தது. அதனால் 12.09.2020 ம் தேதியில் புகார்தாரர் வீட்டில் வைத்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு ரூபாய் 7 லட்சம் கடனாக கொடுக்கவில்லை. அதற்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரிடம் இந்த வழக்கு காசோலையை கொடுக்கவில்லை. எனவே சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக (Legally enforceable debt) வழக்கு காசோலை கொடுக்கவில்லை என ஆட்சேபிக்கப்பட்டது.

இதுசம்மந்தமாக பார்க்கையில், புகார்தாரர் மனுவில் இந்த வழக்கு காசோலை தொகையானது ரூபாய் 7 லட்சத்தில் ரூபாய் 6 லட்சத்தை வங்கியின் மூலம் எடுத்தும், மீதமுள்ள ரூபாய் 1 லட்சத்திற்கு கையிலிருந்த தொகையை சேர்த்து ரூபாய் 7

லட்சத்தை 12.09.2020ம் தேதி புகார்தாரர் வீட்டில் வைத்து குற்றம்சாட்டப்பட்டவரிடம் கொடுத்ததாக கூறியுள்ளார். அதனை ஏற்கும்விதமாக 11.09.2020 அன்று புகார்தாரர் குற்றாலம் கிளை, கனரா வங்கியில் பணம் ரூபாய் 6 லட்சத்தை எடுத்ததற்கான வங்கி கணக்கு கோப்புகள் ம.சா.ஆ.7 தாக்கல் செய்துள்ளார். அதனால் 11.09.2020ம் தேதி ரூபாய் 6 லட்சத்தை புகார்தாரர் அவரது வங்கி கணக்கிலிருந்து எடுத்துள்ளார் என்பது தெளிவாகிறது. அதனால் ரூபாய் 7 லட்சத்தை 12.09.2020 தேதியில் கொடுப்பதற்கு புகார்தாரரிடம் போதுமான பணம் கைவசம் இருந்துள்ளது. அதேபோல் குற்றஞ்சாட்டப்பட்டவர் புகார்தாரரிடமிருந்து கடனாக வாங்கிய பணத்திற்காக இந்த காசோலையை கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். அதனால் இந்த வழக்கு காசோலை Legally enforceable debt—க்காகத்தான் புகார்தாரர் கைவசம் மாறியுள்ளது என்பது தெளிவாகிறது.

அதேவேளையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில், இந்த வழக்கு காசோலையை 12.09.2020ம் தேதிக்கு முன்பு கொடுத்ததாகவும், அதனால் 11.09.2020 தேதியில் புகார்தாரர் அவரது வங்கி கணக்கிலிருந்து ரூ.6,00,000/—யை எடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 12.09.2020ம் தேதி கடனாக கொடுப்பதற்காக அந்த தொகையை எடுக்கவில்லை. அதனால் சட்டப்படியான மறுபயனுக்காக வழக்கு காசோலை கொடுக்கப்படவில்லை என நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையில் நிரூபிக்கவில்லை.

எனவே குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில், குற்றம்சாட்டப்பட்டவருக்கு வழக்கு காசோலை தொகை ரூபாய் 7 லட்சத்தை புகார்தாரர் கடனாக 12.09.2020ம் தேதியில் கொடுத்ததாக கூறியுள்ளதாகவும், அந்த காலகட்டத்தில் நாடு முழுவதும் கொரோனா லாக் டவுன் நடைமுறையில் இருந்ததாகவும், அதனால் 12.09.2020ம் தேதியில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு புகார்தாரர் வீட்டில் வைத்து ரூபாய் 7 லட்சம் கடனாக கொடுக்கவில்லை எனவும், அதற்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரிடம் இந்த வழக்கு

காசோலையை கொடுக்கப்படவில்லை. அதனால் சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக (Legally enforceable debt) வழக்கு காசோலை புகார்தாரரிடம் வரவில்லை என ஆட்சேபிக்கப்பட்டது ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. எனவே மேற்கண்ட பரிசீலனையின்படி, குற்றம் சாட்டப்பட்டவர் பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து பிரச்சனை 1 புகார்தாரருக்கு ஆதரவாக முடிவு செய்கிறது.

9. <u>பிரச்சனை 2–</u>

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர், புகார்தாரருக்கு ஆதரவாக எழுந்த சட்டப்படியான அனுமானங்களை மறுத்தளிக்காமலும், புகார்தாரரிடம் கடனாக ரூபாய் 7 லட்சத்தை குற்றம்சாட்டப்பட்டவர் 12.09.2020ம் தேதி பெற்றுக்கொண்டு அதற்கு ஆதுரவாக இந்த வழக்கு காசோலையை சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுத்துள்ளார் என நீதிமன்றம் தீர்மானித்திருப்பதால், காசோலை தொகை ரூபாய் 7 லட்சத்தை புகார்தாரருக்கு குற்றம்சாட்டப்பட்டவர் இழப்பீடாக செலுத்த வேண்டும் எனவும், 138 NI Act படியான குற்றத்திற்கு 1 வருடம் சாதாரண சிறைதண்டனை குற்றம்சாட்டப்பட்டவர் அனுபவிக்க வேண்டும் என பிரச்சனை 2க்கு தீர்வு காணப்படுகிறது.

10. முடிவாக,

(அ) குற்றம் சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, அந்த குற்றத்திற்கு BNSS பிரிவு 278(2)–ன் கீழ் 1 வருடம் சாதாரண சிறை தண்டனை விதித்தும்,

(ஆ) இன்றைய தேதியிலிருந்து 2 மாதங்களுக்குள் காசோலை தொகையான ரூ.7,00,000/–யை (ஏழு லட்சத்தை) இழப்பீடாக BNSS பிரிவு 395(3)–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர், புகார்தாரருக்கு செலுத்த வேண்டுமென

தீர்ப்பளிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில், மேலும் 3 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

(இ) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

11. **தீர்ப்பு நகல்**

குற்றம் சாட்டப்பட்டவருக்கு இலவசமாக தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.

12. **மேல்முறையீட்டு உரிமை**

தண்டனை தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கான உரிமை குறித்து குற்றவாளிக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 24ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.24 16:50:14 +0530

நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.

புகார்தாரர் தரப்பு சாட்சி –

1. பு.சா.1 – பொன்னுத்துரை

புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் –

ம.சா.ஆ.1	03.12.2020ம் தேதியிட்டு ரூ.7,00,000/-க்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் வழங்கிய IDBI Bank, தென்காசி கிளைக்குரிய காசோலை எண்.052923

ம.சா.ஆ.2	03.12.2020 ம் தேதியிட்ட காசோலையை வங்கியில் செலுத்தப்பட்ட கவுண்டர் பாயில்
ம.சா.ஆ.3	05.12.2020 ம் தேதியில் காசோலை திருப்பப்பட்டதற்கு வழங்கப்பட்ட மெமோ
ம.சா.ஆ.4	28.12.2020 ம் தேதியில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல்
ம.சா.ஆ.5	28.12.2020 ம் தேதியில் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது
ம.சா.ஆ.6	29.12.2020 ம் தேதியிட்ட Return notice cover
ம.சா.ஆ.7	11.09.2020 அன்று மனுதாரர் குற்றாலம் கிளை, கனரா வங்கியில் பணம் எடுத்ததற்கான வங்கி கணக்கு கோப்புகள்
ம.சா.ஆ.8	வட்டாட்சியர் மனுதாரரின் தாயார் மனோரஞ்சிதத்திற்கு வழங்கிய Money Lender License No.16/2017 ம.சா.ஆ.8

<u>எதிரி தரப்பு சாட்சி</u> – இல்லை.

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.24 16:50:19 +0530

நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.